# விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்
## முன்னிலை: திரு. கா.பெரோஸ் கான் அப்துல்லா

**ந.க.எண். அI(3)/1414/27/2024.** **நாள்: 24.06.2024.**
**மா.ஆ.எண். 684/2024**

**குறுந்தலைப்பு** : காவல் - விருதுநகர் மாவட்டம் - திரு.S.சாம்பினோ, இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம் முன்பு கணினி விவர பதிவாளர், விருதுநகர் மாவட்டம் - அரசிடம் உரிய அனுமதி பெறாமல் பணிவரன்முறை செய்த ஆணையை ரத்து செய்தும் அரசாணையின் படி 01.05.2007 மு.ப. முதல் முன்தேதியிட்டு கணினி விவர பதிவாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**படிக்கப்பட்டது**

1. இவ்வலுவலக மாவட்ட ஆணை எண்.1332/2005 ந.க.எண்.A1(3)/43926/2005, நாள்.25.08.2005.
2. இவ்வலுவலக மாவட்ட ஆணை எண்.991/2016 ந.க.எண்.A1(3)/582/13198/2016, நாள்.29.07.2016.
3. அரசாணை எண். (2டி) எண்.460 உள் (காவல். 15) துறை, நாள்.18.12.2023.
4. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.1799852/சி.ஏ.ஆர்./2023 நாள்.07.12.2023.
5. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.ப.பி.2(1)/127166/2017 நாள்.05.01.2024.

******

**ஆணை:**

திரு.S.சாம்பினோ, இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், சென்னை முன்பு கணினி விவர பதிவாளர், விருதுநகர் மாவட்டம் என்பவருக்கு தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண். 1433/சி.ஏ1/2005 நாள்.13.07.2005 ___ன் பிரகாரம் பார்வை -1 ல் கண்ட இவ்வலுவலக ஆணையின் படி கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக இம்மாவட்டத்தில் 01.09.2005 முற்பகல் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டார். பின்பு, பார்வை-2ன் படி இவ்வலுவலக ஆணையின்படி அன்னாரது கணினி விவர பதிவாளர் பதவியானது 01.05.2007 மு.ப. முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

2) இந்நிலையில், பார்வை-3ல் கண்ட அரசாணையில் காவல்துறையில் பணிபுரிந்து மறைந்த அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, பணிமாறுதலில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் தனியரின் கணினிவிவர பதிவாளர் பதவியானது உரிய விதிகளுக்கு விலக்கு ஏதும் பெறப்படாமல் பணிநியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது என்றும் இதனை இரத்து செய்யுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

3) எனவே, அரசிடமிருந்து விதித்தளர்வு பெறாமல் தனியருக்கு கணினிவிவர பதிவாளர் பணியினை 01.05.2007 லில் பணிவரன்முறை செய்யப்பட்ட பார்வை -2 ல் கண்ட இவ்வலுவலக ஆணை இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

4) மேலும், பார்வை-3ல் கண்ட அரசாணையின் படி தனியரின் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட கணினி விவர பதிவாளர் பதவியினை கீழ்க்கண்டவாறு விதித்தளர்வு செய்து அப்பணிடத்திற்கு தேவையான உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 01.05.2007 மு.ப.முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர், தற்போது வகிக்கும் பதவி மற்றும் பணிநியமனம் செய்யப்பட்ட நாள் | கோரப்பட்ட விதி விலக்கு விவரம் | பணிநியமனம் நாளன்று நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் தளர்வு செய்ய வேண்டிய விதிகள் |
|---|---|---|---|
| 1. | எஸ்.சாம்பினோ,<br>இளநிலை உதவியாளர்<br>க.வி.ப.-01.09.2005<br>இ.நி.உ.-04.10.2012 | குறும வயது (ம) காலம் கடந்த விண்ணப்பம்<br>த.நா.அ.ப(ப.நி)சட்டம், 2016, பிரிவு 28(2)<br>அராசணை (நிலை) எண்.18, தொ.(ம)வே.வா.துறை. நாள்.23.01.2020 | குறும வயது (ம) காலம் கடந்த விண்ணப்பம் குறித்து விதி 12(bbb) மற்றும் பணபலன்கள் பெற விதி 23(a)(ii) அரசாணை(நிலை) எண்.18, தொ.(ம)வே.வா.துறை. நாள்.23.01.2020-னை தளர்வு செய்யப்பட வேண்டும். |

5) எனவே, பார்வை-3ல் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி திரு.S.சாம்பினோ, இளநிலை உதவியாளர் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட கணினி விவர பதிவாளர் பதவியினை 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பபடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வுகள் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை பெற விதிகளின் படி தகுதியுடையவர்.

**ஓம் /- கா.பெரோஸ் கான் அப்துல்லா.,**
காவல் கண்காணிப்பாளர்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>பெறுநர்:</u>**

**திரு.S.சாம்பினோ, இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், சென்னை.**

**நகல்:** காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை.
**நகல்:** மாவட்ட ஆணை புத்தகம்.

**// உ.ந.உ.ப.அ//**

கண்காணிப்பாளர்.

24/06/24